# திலகவதி புதினங்களில் காதல்

***கு. ஜெயலட்சுமி***
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***சு. விஜயா கலைவாணி***
நெறியாளர் , ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி , தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958711

***ஆய்வுச் சுருக்கம்***

*``கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடிசுசு என்ற வரிகள் மூலம் தமிழின் பெருமைகளை அறியலாம். அத்தகு மொழியில் இலக்கியங்கள் தோன்றிய காலத்திலிருந்தே கதை இலக்கியங்களும் தோன்றி விட்டது. மக்களின் வாழ்க்கை முறையில் சமூக பொருளாதார அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் இலக்கியங்களில் ஆண்களின் மேலாதிக்கப் போக்கு நிலைபெற்று வருவதை அறிய முடிகிறது. சமூக வளர்ச்சி என்பது ஆண் பெண் இருவரையும் சார்ந்தே அமைகிறது. ஆண் பெண் உறவுநிலை தொடர்ந்து நிலைபெறுவதற்கு அன்பு, பாசம், காதல், பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் பண்பு ஆகியவை முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஒரு ஆண் பெண்மீது வைக்கும் அன்போ பெண் ஆண்மீது வைக்கும் அன்போ சமுதாயத்தில் காதல் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. ஆண் பெண் இருவரும் விரும்பி காதல் கொண்டு அக்காதலில் உண்மைத் தன்மையின்றி தன் சுயநலத்திற்காக ஆண்கள் விலகிச் செல்லும்போது பெண்களுக்கு அத்தகைய காதலே பெரும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. திருமணத்திற்குப்பின்னும்காதல்பலபேரின்வாழ்வில்சிக்கலையே ஏற்படுத்துகிறது. ஆண்கள் தம் உடல்தேவையை நிறைவேற்ற பெண்களிடம் காதல் போல் நடிக்கின்றனர். காதல் என்ற பெயரில் பல பெண்களை ஏமாற்றி திருமணம் செய்கின்றனர். காதல் வாழ்வில் பெண்களின் இந்த நிலை மாறினாலன்றி சமுதாயத்தில் மாற்றம் ஏற்படாது. மேலும் அன்பை பிரதானமாகக் கொண்டு கணவனின் உயர்வுக்கு மனைவியும் மனைவியின் உயர்வுக்கு கணவனும் துணையாக அமைகின்ற குடும்பமே சிறந்த குடும்பமாகும்.*

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயின. மக்களின் வாழ்க்கை முறையில் சமூக பொருளாதார அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் இலக்கியங்களில் ஆண்களின் மேலாதிக்கப் போக்கு நிலைபெற்று வருவதை அறிய முடிகிறது.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்'' என்ற கவிமணியின் கூற்றினைப் போற்றினாலும் மாதரை இழிவுபடுத்தும் நிலையையும் ஆங்காங்கே காணமுடிகிறது. சமூக வளர்ச்சி என்பது ஆண் பெண் இருவரையும் சார்ந்தே அமைகிறது. ஆண் பெண் உறவுநிலை தொடர்ந்து நிலைபெறுவதற்கு அன்பு, பாசம், காதல், பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் பண்பு ஆகியவை முக்கிய காரணங்களாக அமைகின்றன.இத்தகைய பண்புகளில் ஒன்றான காதலில் ஏற்படக்கூடிய குழப்பங்களை நீக்கி உறவுகளின் மேன்மைகளை உணர்த்தும் படியான கதைக்கருவை அமைத்து நாவல்களை உருவாக்குவதில் முதன்மையானவர் ஆசிரியர் திலகவதி.

**திலகவதி**

சமுதாயத்தில் ஒருவன் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு சிறந்த ஏணியாக அமைவது கல்வி ஆகும். அத்தகைய கல்வியின் உதவியால், கல்வியில் பின்தங்கிய நிலையிலிருக்கும் தர்மபுரி மாவட்டத்தில் பிறந்து, ஐ.பி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று டி.ஜி.பி பொறுப்பையும் ஏற்றவர் திலகவதி ஆவார். சாகித்ய அகாதமி விருதுக்குச் சொந்தக்காரராகிய திலகவதி சமூகத்தோடும் சமூக மக்களோடும் நெருங்கிய தொடர்பில் இருக்கக்கூடியபணியில்இருந்ததால்அவருடைய படைப்புகளும் மக்களின் பிரச்சனைகளைக் கூறி அதற்குத் தீர்வுகளைக் காண்பதாகவே அமைந்துள்ளன. அவ்வகையில் படைக்கப்பட்ட நாவல்களில் ஆண் பெண் காதல் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**காதல்**

தமிழரின் வாழ்வு அகம் புறம் என இருவகைப்படும். அகம் என்பது காதல் வாழ்வு. காதல் உயிரியல்பாக தமிழரின் உதிரத்தோடு ஒன்றிணைந்த ஒன்றாக விளங்குகிறது. காதல் என்பது உள்ளத்தில் ஏற்படுகின்ற ஒருவித அன்பு ஆகும். ஒரு ஆண் பெண்மீது வைக்கும் அன்போ பெண் ஆண்மீதுவைக்கும்அன்போசமுதாயத்தில் காதல் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. மனிதனின் அடிப்படை உணர்வுகளுள் தலையாய உணர்வாகிய காதல் பெரும்பாலும் ஒத்த வயதும் தன்மையுமுடைய ஆண் பெண் இருபாலருக்குமிடையே ஏற்படுவதாகக் கூறுகிறார் தொல்காப்பியர். இதனையே,

**''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பால தானையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப''**
***(தொல்காப்பியம்- களவியல்-பா.90)***

என்று கூறியுள்ளார். சங்க காலத்தில் மக்களின் வாழ்க்கை காதலை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது.

**திலகவதி புதினங்களில் காதல்**

முன்பின் அறியாத பருவ வயதுடைய ஆணும் பெண்ணும் எதிர்பாராத முறையில் சந்தித்து உள்ளங்கலந்து உயிர்கலந்து உறவாடி அவர்கள் ஒன்றி வாழும் வாழ்க்கையே காதல் வாழ்க்கை ஆகும். இதனை திலகவதி ''தமிழ்க்கொடியின் காதல்'' என்னும் புதினத்தில்,

**''உயிருக்குள் உயிராய்**
**நாம் கரைய வேண்டும்**
**உலகத்தை ஒரு கணத்தில்**
**மறக்க வேண்டும்**
**மலருக்குள் மறைந்திருக்கும்**
**பசுமை போல**
**பார்க்கின்ற இடமெல்லாம் நீ**
**நிறைய வேண்டும்**
**ஏழுலகம் காலின்கீழ்**
**சுழல வேண்டும்**
**ஏவல் செய்யத் தெய்வங்கள்**
**ஏங்க வேண்டும்''**
***(தமிழ்க்கொடியின் காதல்- ப.45)***

என்று ''பா'' தமிழ்க்கொடி மீது கொண்ட காதலை வெளி ப்படுத்துவதாகக் கூறுகிறார். மேலும் நேசத்துணை புதினத்தில், வடிவேலுவின் முதல் மனைவியாகிய நளினியின் தோழி பாகீரதி காதல் குறித்த தனது எண்ணத்தைக் கூறும் போது,

**''காதல் என்பது மிருக இச்சைக்கும் இனப்பெருக்கத்திற்கும் மனிதன் வைத் திருக்கின்ற நாகரீகமான பெயர்''**
***(நேசத்துணை-ப.85)***

என்று கூறுவதாக திலகவதி காதல் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

**திருமணத்திற்கு முந்தைய காதல்**

''காதலிற்கு கண்கள் இல்லை'', ''இடம், மனம், பணம் பார்த்து வருவதில்லை காதல்'' என்ற வரிகள் காதல் எவர் மேலும் எத்தகைய சூழலிலும் ஏற்படலாம் என்பதை வெளி ப்படுத்துகிறது. பேருந்து நிலையங்கள், கல்வி நிலையங்கள், அலுவலகங்கள் இவையே பெரும்பாலும் காதல் தோன்றும் களங்களாக உள்ளன. இத்தகைய சூழலில் உருவாகும் காதல் ஆண் பெண் இருவருக்குமிடையே பல சிக்க ல்களை ஏற்படுத்துகிறது. இதனையே திலகவதி,

**''காதல் வாழ்க்கையிலே ஒரு அம்சம். அழகான பகுதி. அற்புதமான அனுபவம். ஒருத்தரையொருத்தர் நூறு சதம் புரிஞ்சுக்கற நல்ல வாய்ப்பு. சிநேகிதம்ங்கிற பு பழமாகப் பழுத்தது மாதிரி. அது எல்லாம் சரி ஆனால் காதலே வாழ்க்கை ஆயிடாது. வாழ்க்கை காதலிக்கிறதுக்காக மட்டும் இல்லே. உயிர் வாழ்க்கைங்கறது ஒரு விளக்குன்னா காதலுங்கறது அதைத் தூண்டிப் பிரகாசப்படுத்துற கருவிதான். கருவி விளக்காகுமா? நம்ப கதைகளும் சினிமாக்களும்காதலைப்பற்றித்தப்பாகத்துக் குடுத்திருக்கிது. காதல்லே தோத்துப்போனா ஒன்னு தற்கொலை பண்ணிக்கிறாங்க அல்லது தாடி வளர்க்கறாங்க. காதலோட எல்லாமா போயிடும் மனுசனுக்கு மான உணர்வு இருக்கே அது உயிரோட அல்லவா போகும்?''**

***(நாளை எனது ராஜாங்கம் -ப.180)***

ஆண் பெண் இருவரும் விரும்பி காதல் கொண்டு அக்காதலில் உண்மைத் தன்மையின்றி தன் சுயநலத்திற்காக ஆண்கள் விலகிச்செல்லும்போது பெண்களுக்கு அத்தகைய காதலே பெரும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது என்று தனது நாளை எனது ராஜாங்கம் என்னும் புதினத்தின் வாயிலாகக் கூறுகிறார் .

**திருமணத்திற்கு பிந்தைய காதல்**

திருமணத்திற்குப் பின்னும் காதல் பலபேரின் வாழ்வில் சிக்கலையே ஏற்படுத்துகிறது. இதனால் சில பெண்கள் திருமணமே செய்துகொள்ளாமல் காதல் நினைவுகளுடனேயே வாழ்கின்றனர். திருமணம் செய்து கொண்டாலும் சிலர் அதனை எண்ணி எண்ணி வாழ்வினை நிம்மதியின்றி வாழ்கின்றனர். வேறு ஆணைத் திருமணம் செய்துகொண்டாலும் திருமணத் தின்பின் பழைய காதலைக் கூறி வேதனைக்கு உள்ளாக்குகின்றனர். இதனையே திலகவதி,

**''கலாவின் மனதின் உள்ளே கனத்துக் கருத்து மேகம் ஒன்று படர்ந்தது. சுடர் அச்சகத்தில் வேலை பார்த்து வந்த நாட்களில் மூர்த்தியின்பால் காதல் வயப்பட்டு அனுபவித்த அந்த மெல்லிய வேதனைகளும் அவனை நம்பி மணந்து கொண்டு தன் தலையிலேயே மண்ணை வாரி போட்டுக் கொண்டதும் நெஞ்சுக்குள் கசப்பாய் பீறிட்டது.''**

***(சொப்பனபுமியில்-ப.85)***

என்று சொப்பன புமியில் புதினத்தில் கலா மற்றும் மூர்த்தியின் வாழ்வுவழி விளக்குகிறார்.

**நிறைவேறாக் காதல்**

அன்பே உலகின் பிரதானம்.அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியாததையும் அன்பால் கட்டுப்படுத்த முடிகிறது. இந்த அன்பு என்பது பாசம், காதல் என்று பல பெயர்களில் வழங்கப்படுகிறது. உண்மையான காதல் என்பது என்றும் மாறுவதில்லை என்பதை,

**''விரல் நகத்தை வெட்டி எறிந்தாலும்**
**அது மீண்டும் வளர்ந்து வரும்**
**எனை மண்ணில் போட்டு புதைத்தாலும்**
**என் காதல் உன்னைத் தொடர்ந்து வரும்.''**

என்று தியாரூ கூறுகிறார். இதனையே திலகவதி தனது நேசத்துணை புதினத்தில் நளினியின் தம்பியான வெங்கடேசனை எதிர்

வீட்டு மங்களம் கண்டுகொள்ளாமல் விலகிச் செல்லும்போது,

**''எங்க வீட்டுப் பையன்தான் உன் வேடிக்கைக்கும் பொழுதுபோக்குக்கும் ஆளாக் கிடைச்சானா சும்மாக்கிடந்த ஆம்பளை மனசைப் பாடாப்படுத்தி அங்க நின்னு இங்க நின்னு பார்த்துப் பார்த்துஅவன் கண்ணுல படுறாப்பல விசுக்கு விசுக்குன்னு நடந்து அவன் மனசைக் கலைச்சுட்டு இப்ப ஒன்னுந் தெரியாத மாதிரி''**

**(நேசத்துனை-ப.161)**

என்று கஸ்தூரி கூறுவதாகக் கூறுகிறார்.

### ஏமாற்றுக் காதல்

காதல் என்பது உயிர் சார்ந்தது. அது உண்மைனான உயிர்த் தோழமை. அன்பின் வெளி ப்பாடு. இன்றைய உலக இயக்கத்திற்கு இன்றியமையாதது. மகாகவி காதலின் பெருமையை கூறும்போது

**''காதல், காதல், காதல்**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல், சாதல், சாதல்''**

என்கிறார் என்று பெ.சுயம்பு தமது தமிழ் இலக்கிய வரலாறு(ப.76) நூலில் கூறுகிறார். காதல் என்பது காமத்தை முன்னிறுத்துவதாகவே அமைந்துள்ளது. உணர்ச்சியைத் தூண்டுகின்ற காதல் பெரும்பாலும் தோல்வியிலே தான் முடிவுபெறுகிறது. மனதிற்குப் பிடித்த ஆணைப் பெண் விரும்பினால் அதனைக் காமம் என்கின்றனர். அதே நிலையில் பெண்ணை ஆண் தேடினால் அதனை வீரம் என்று பெருமைப்படுத்துகின்றனர். ஆண்கள் தம் உடல்தேவையை நிறைவேற்ற பெண்களிடம் காதல் போல் நடிக்கின்றனர். காதல் என்ற பெயரில் பல பெண்களை ஏமாற்றி திருமணம் செய்வதை திலகவதி,

**''கலா வேலை பார்த்து வந்த அச்சகத்தில் டிரெடில்மேன், பாபநாசம் மூர்த்தி, வசீகரமாகப் பேசுவதில் வல்லவன்.அவனோடு பேசிப் பழகி நட்பை வளர்த்து காதலாக்கி, கனவுகள் கண்டு, வயிற்றுக் கருவுடன் வீட்டை விட்டு வெளியே வந்து அனைவரையும் வெறுத்து அவனுடன் தனிக்குடித்தனம் போனபின்தான் அவனுடைய உண்மையான சொரூபம் தெரிய வந்தது''.**

**(சொப்பன புமியில்- ப.52)**

என்று கூறுகிறார்.

### முடிவுரை

இந்நவீன யுகத்தில் ஆண் பெண் உறவுமுறை எவ்வளவு சிறப்பாக இருப்பினும் காதல் வாழ்வில் பெண்கள் பல பிரச்சனைகளைத் தாண்டி வருகின்றனர் என்பதையும் குடும்பச் சூழலில் வாழும் பெண் தன்னால் முடிந்த செயல்களைச் செய்து தம் குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் மகிழ்ச்சியைக் காப்பாற்றுவதையும் கடமையாகக் கொண்டு செயல்பட்டாலும் கணவன் மனைவி உறவு பல இன்னல்களுக்கு இடையிலேயே தொடர்ந்து கொண்டு இருக்கிறது என்பதையும் மிகவும் சிறப்பாகத் தமது நாவல்களில் எழுத்தாளர் திலகவதி அவர்கள் எடுத்துரைக்கிறார்.

### தொகுப்புரை

சமூகத்தைச் சீரமைக்கும் மனப்பான்மையில் எழுதுவது ஒரு எழுத்தாளனின் கடமை. மக்களிடம் எந்தவொரு கருத்தையும் கொண்டு சேர்ப்பதற்கு நாவல் ஒரு சிறந்த கருவியாக உள்ளது. சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை காலத்திற்குக் காலம் மாறுதல் அடைந்த சமூகத்தின் நிலையே நாவல்களின் பாடுபொருளாக அமைந்திருக்கின்றன. அவ்வகையில் திலகவதியின் நாவல்களில் திருமணத்திற்கு முன்னும் பின்னும் பெண்கள் காதலால் பல்வேறு சிக்கல்களை சந்திக்கின்றனா. காதல், நிறைவேறாக் காதல், காதல் என்ற போர்வையில் பெண்களை ஏமாற்றி அவர்களின் வாழ்க்கையை ஏமாற்றும் ஆண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பது குறித்து தெளி வுபடுத்தப்படுகிறது. காதல் வாழ்வில் பெண்களின் இந்த நிலை மாறினாலன்றி சமுதாயத்தில் மாற்றம் ஏற்படாது. மேலும் அன்பை பிரதானமாகக் கொண்டு கணவனின் உயர்வுக்கு மனைவியும்

மனைவியின் உயர்வுக்கு கணவனும் துணையாக அமைகின்ற குடும்பமே சிறந்த குடும்பமாகும்.

**துணைநூற் பட்டியல்**


1. திலகவதி, சொப்பனபுமியில் அம்ருதா பப்ளிகேசுன்ஸ், சென்னை, முதல்பதிப்பு - 2007
2. திலகவதி, நேசத்துணை அம்ருதா பப்ளிகேசுன்ஸ், சென்னை, முதல்பதிப்பு - 2007
3. திலகவதி, தமிழ்க் கொடியின் காதல் அம்ருதா பப்ளிகேசுன்ஸ், சென்னை -116
4. திலகவதி - நாளை எனது ராஜாங்கம் புதுமைப்பித்தன் பதிப்பகம், அசோக் நகர் சென்னை -600083
5. இளம்புரணர். (உ.ஆ) - தொல்காப்பியம்-பொருளதிகாரம் முல்லை நிலையம், சென்னை 2000 (ப.எ.இ)
6. சுயம்பு. பெ - தமிழ் இலக்கிய வரலாறு பாரதி பதிப்பகம் திசையன்விளை முதல்பதிப்பு - 2011